மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : மேலவைத் துணைத் தலைவரவர்களே,

"சட்ட மன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ்நாடு 1975 ஆம் ஆண்டு கேளிக்கை வரி—உள்ளாட்சி மன்றங்கள் நிதி (திருத்த) சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 44/1975) திருப்பியனுப்பப்பட வேண்டும்"

என்று முன்மொழிகிறேன்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : அவை முன் உள்ள பிரச்சினை :

"சட்ட மன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ்நாடு, 1975 ஆம் ஆண்டு கேளிக்கை வரி—உள்ளாட்சி மன்றங்கள் நிதி (திருத்த) சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 44/1975) திருப்பியனுப்பப்பட வேண்டும்."

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

(2) தமிழ்நாடு, 1975 ஆம் ஆண்டு, மாவட்ட நகராட்சி மன்ற உறுப்பினர்கள் (பதவிக் கால நீட்டிப்பு) சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 45/1975).

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : மாண்புமிகு துணைத் தலைவரவர்களே,

"சட்ட மன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ்நாடு, 1975 ஆம் ஆண்டு, மாவட்ட நகராட்சி மன்ற உறுப்பினர்கள் (பதவிக் கால நீட்டிப்பு) சட்ட முன்வடிவு, @(சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 45/1975) ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்" என்று முன் மொழிகிறேன்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : முன் மொழியப்பட்ட தீர்மானம் :

"சட்ட மன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ்நாடு, 1975 ஆம் ஆண்டு, மாவட்ட நகராட்சி மன்ற உறுப்பினர்கள் (பதவிக் கால நீட்டிப்பு) சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 45/1975) ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்".

திரு. ஒய். வெங்கடேஸ்வர தீக்ஷிதர் : மாண்புமிகு துணைத் தலைவரவர்களே, இந்தச் சட்டத்தின் மூலம் நகராட்சிகளின் ஆயுட் காலமானது 1976 ஆம் ஆண்டு ஜூன்மாதம் 30 ஆம் தேதிவரை நீட்டிக்கப்படு கிறது. பதவிக் காலத்தை நீட்டிப்பதற்கான காரணங்கள் சொல்லப்

@ 236-237 ஆம் பக்கங்களில் இணைப்பு III ஆக அச்சிடப்பட்டுள்ளது.

பட்டிருக்கின்றன. இருந்த போதிலும் ஜனநாயக நாட்டிலே இந்த மாதிரித் தேர்தலை அடிக்கடி ஒத்திப் போடுவதானது, மக்களின் மனத்திலே ஒரு சந்தேகத்தை ஏற்படுத்துவதற்குக் காரணமாக அமையு மென்று நான் கருதுகிறேன். இப்போது புதிதாக, மாநகராட்சிகளாக மாற்றப்பட்டிருக்கும் கோயம்புத்தூர், மதுரை மற்றும் ஏற்கெனவே மாநகராட்சியாக இருக்கும் சென்னை ஆகிய இடங்களில் ஸ்பெஷல் ஆபீசர்களின்கீழ் நிர்வாகம் இயங்குகிறது. மற்ற நகராட்சிகளிலே, மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களாலே ஓரளவுக்கு நிர்வாகம் நடந்து வருகிறது. ஆனால் புது மாநகராட்சிகளாக மாற்றப்பட்டிருக்கும் 2 நகராட்சிகள் மற்றும் ஏற்கெனவே மாநகராட்சியாக உள்ள சென்னை ஆகிய இடங்களில் ஸ்பெஷல் ஆபீசர் மூலம் நிர்வாகம் நடைபெற்று வருகிறது. மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள் நிர்வாகத்திலே இருந்துகொண்டு, தினம் தினம் அந்த நிர்வாகத்திலே கலந்துகொண்டு, அதை நடத்துகிற நேரத்திலேயே அதிலே பலவிதமான ஊழல்களும், சங்கடங்களும் ஏற்படுகின்றன. ஆனால் கோடிக் கணக்கான ரூபாய் வருமானம் வருகின்ற சென்னை மாநகராட்சியிலும், மாற்றி யமைக்கப்பட்டுள்ள கோவை, மதுரை மாநகராட்சிகளிலும் ஸ்பெஷல் ஆபீசர் அளவிலே நிர்வாகம் நடந்தால், மக்களுக்குச் சரியான முறை யில் நியாயம் கிடைக்குமாவென்பது ஐயப்பாட்டிற்கு உரியது. ஏனென்றால் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள் இருக்கும்போதே, நிர்வாகத்தில் உள்ளவர்கள் செய்யக்கூடிய காரியங்கள் மக்களுக்குப் பாதகத்தையும், கஷ்டத்தையும் உண்டாக்குகின்றன. முக்கியமாக நாம் வரி போடுகிறோம். வரியை ஏற்றுகிறோம்; வரியைக் குறைக்கிறோம். இப்போது அதை ஸ்பெஷல் ஆபீசர் போடுகிறார். அவர்கள் போட்டது போட்டதுதான். ஆனால், நிர்வாகத்திலே, தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள் இருந்தால் பல கமிட்டிகள் இருக்கும். அதன்மூலம் எல்லாவிதமான நன்மை களும் மக்களுக்குக் கிடைக்கும். ஜனநாயக முறையிலே, உறுப்பினர்கள் ஆங்காங்கே காலையிலேயிருந்து இரவுவரை பணியாற்றுவார்கள். பல கட்சிகள் இந்த நாட்டிலே இருக்கின்றன. பல கட்சிக்காரர்கள் நகராட்சிகளில் உறுப்பினர்களாக இருக்கிறார்கள். அந்த உறுப்பினர்கள் அந்த இடங்களில் என்னென்ன இருக்கின்றன; என்னென்ன இல்லை என்பதைக் கவனித்துக்கொண்டிருப்பார்கள். ஆனால் சென்னை, மதுரை, கோவை ஆகிய இடங்களிலுள்ள மாநகராட்சி நிர்வாகங்கள் அப்படி நடக்க முடியுமா என்பது சந்தேகத்திற்குரியது. எனவே மக்களை கஷ்டத்திற்குள்ளாக்காமல் இருக்க ஆலோசனைக் குழுக்களை அமைக்க வேண்டும். தனிப்பட்ட கட்சியாக இல்லாவிட்டாலும், சர்வ கட்சி உறுப் பினர்களைக் கொண்ட ஆலோசனைக் குழுவினை அமைத்து, அன்றாட நிர்வாகத்தைக் கண்காணிக்க ஏற்பாடு செய்ய வேண்டும. இந்தக் குழு மூன்று மாநகராட்சிகளிலும் தேர்தல்கள் நடக்கும்வரை இருக்க வேண்டும். நாட்டிலே எமர்ஜன்சி இருக்கும்வரையில், தேர்தல் வருமோ, வராதோ தெரியாது. எனவே சர்வ கட்சி ஆலோசனைக் குழுவை நியமித்து, மாநகராட்சிகளின் நிர்வாகத்தை நடத்தினால், அது மக்களுக்கு நல்ல பயனை அளிக்குமென்று கூறிக்கொண்டு, முடித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :— மாண்புமிகு துணைத் தலைவரவர்களே, இந்தச் சட்ட முன்வடிவினால் நகராட்சிகளுக்கான தேர்தல்கள் மீண்டும் ஓராண்டு தள்ளிவைக்கப்படுகின்றன. ஏற்கெனவே நடைபெற வேண்டிய தேர்தல்கள் ஓராண்டு ஒத்திவைக்கப்பட்டதற்கு அடிப்படையான காரணம், நாம் அந்தத் தேர்தலை நடத்தக்கூடிய சூழ்நிலை ஏற்படவில்லை, எதிர்பாராது இயற்கையால் வறட்சி ஏற்பட்டால், அந்த நேரத்தில் தேர்தலை வைப்பது நல்லதல்ல என்ற அடிப்படையில் அந்த முடிவு எடுக்கப்பட்டது. இதற்கும், ஜனநாயகத்திற்கும் எந்தவிதமான சம்பந்தமும் இல்லையென்று தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். ஜனநாயகமே இருக்கிறதா, இல்லையா என்பது கேள்விக் குறியாக இருக்கும்போது, நகரசபைத் தேர்தலைப் பற்றிக் கவலைப்பட வேண்டுமா என்பது ஐயத்திற்குரியதாகும். மாண்புமிகு உறுப்பினர் திரு. தீக்ஷிதர் அவர்கள் பேசும்போது ஒரு கருத்தைச் சொன்னார்கள். தனி அதிகாரிகள் இருக்கும் இடங்களில், அவர்களை விட்டு வைக்க வேண்டுமா.......

திரு. என். சங்கரேசத் தேவர் : துணைத் தலைவரவர்களே, அமைச்சரவர்கள் ஜனநாயகம் இருக்கிறதா, இல்லையா என்பது கேள்விக் குறியாக இருக்கிறதென்று குறிப்பிட்டார்கள். எதைக் குறிப்பிட்டு அப்படிச் சொல்லுகிறார்களென்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : அது அவருக்கு ஒன்றும் புரியாததல்ல என்று தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். தனி அதிகாரிகளை அப்படியே விட்டுவைக்க வேண்டுமென்பது அரசாங்கத்தினுடைய கொள்கையல்ல. அங்கேயும் விரைவிலே தேர்தல்களை நடத்தி, மாநகராட்சி உறுப்பினர்களாலே நிர்வாகம் செய்யப்படுவதுதான் உகந்ததென்பது அரசாங்கத்தின் அடிப்படைக் கொள்கையாகும். ஆனால், மாநகராட்சிகளைப் பொறுத்தவரையில், வார்டுகளைப் பிரிப்பது, வாக்காளர் பட்டியல் தயாரிப்பது போன்ற காரியங்களையெல்லாம் பொதுத் தேர்தல்கள் வரும் சூழ்நிலையின் அடிப்படையிலே செய்ய வேண்டியிருக்கிறது. ஆனால் அத்தகைய வார்டு பிரிப்பது, வாக்காளர் பட்டியல் தயாரிப்பது போன்ற காரியங்களையெல்லாம் இப்போது செய்ய வேண்டாமென்று மத்திய அரசாங்கத்திடமிருந்து உத்தரவு வந்திருக்கிறது. ஆகவே, நாம் அதைச் செய்து, முறையான தேர்தலை நடத்த முடியவில்லை. மேலும், அவர்கள் ஆலோசனைக் குழு அமைக்க வேண்டுமென்று சொன்னார்கள். ஆலோசனைக் குழு என்று சொல்லிவிட்டு, அது வரியை உயர்த்துவதற்கும், குறைப்பதற்கும் பயன்படுமென்று சொன்னார்கள். கவுன்சிலே அதற்குத்தான் பயன்பட்டது. ஆலோசனைக் குழு மூலம் கவுன்சிலை உருவாக்கினால், அது எந்த அளவுக்கு சட்டத்திற்குப் பொருத்தமாக இருக்குமென்பது தெரியவில்லை. சட்டமன்றப் பேரவையிலும் விவாதம் நடைபெற்றபோது இதுபோன்ற ஒரு தனி ஆலோசனைக் குழுவை அமைக்கலாமா என்பதுபற்றி அரசாங்கம்

நிச்சயமாகப் பரிசீலிக்கும் என்று தெரிவித்தேன். மாநகராட்சித் தேர்தல் தற்போது நடத்துவதில் கஷ்டம் இருப்பதால், அதாவது, பொதுத் தேர்தல் நடைபெறுகின்ற வரை நாம் நகராட்சி மன்றங்களின் வார்டுகளைப் பிரிப்பதோ, வாக்காளர் பட்டியலைத் தயாரிப்பதோ இயலாது என்பதனால் பொதுத் தேர்தல் வரைக்கும் தனி அதிகாரி இருக்கவேண்டிய கட்டாய சூழ்நிலை இருக்கிறது. ஆகவே, அதுபற்றி நன்கு சிந்தித்து முடிவு செய்யலாம் என்று தெரிவித்துக் கொண்டு இந்தச் சட்ட முன்வடிவை நிறைவேற்றித் தரவேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகின்றேன்.

(பிற்பகல் 4·50)

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்: அவை முன் உள்ள பிரச்சினை:—

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ்நாடு 1975-ஆம் ஆண்டு, மாவட்ட நகராட்சி மன்ற உறுப்பினர்கள் (பதவிக்கால நீட்டிப்பு) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 45/1975) ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்."

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

சட்ட முன்வடிவு பிரிவு வாரியாக ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

பிரிவுகள் 2ம், 3ம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டன.

பிரிவு 1, சட்டமியற்றும் முறை, நெடுந்தலைப்பு ஆகியவை, அவையின் முடிவிற்கு விடப்பட்டு நிறைவேற்றப்பட்டன.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே,

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ்நாடு, 1975-ஆம் ஆண்டு, மாவட்ட நகராட்சி மன்ற உறுப்பினர்கள் (பதவிக் கால நீட்டிப்பு) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 45/1975) நிறைவேற்றப்பட வேண்டும்" என்று முன் மொழிகிறேன்:

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்: அவை முன் உள்ள பிரச்சினை.

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ்நாடு, 1975-ஆம் ஆண்டு, மாவட்ட நகராட்சி மன்ற உறுப்பினர்கள் (பதவிக்கால நீட்டிப்பு) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 45/1975) நிறைவேற்றப்பட வேண்டும்."

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

(3) தமிழ்நாடு, 1975 ஆம் ஆண்டு ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியக் குழுக்கள் (பதவிக்கால நீட்டிப்பு) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 46/1975)

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே,

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ்நாடு, 1975-ஆம் ஆண்டு ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியக் குழுக்கள் (பதவிக்கால நீட்டிப்பு) சட்ட முன்வடிவு @ (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 46/1975) ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்" என்று முன்மொழிகிறேன்.

மாண்புமிகு மேலவைத் துணைத்தலைவர்: முன்மொழியப்பட்ட தீர்மானம்:

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ்நாடு, 1975 ஆம் ஆண்டு ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியக் குழுக்கள் (பதவிக்கால நீட்டிப்பு, சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 46/1975 ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்."

திரு. ஏ. பாலசுப்பிரமணியம்: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, தமிழகத்தைப் பொறுத்தவரையில், ஜனநாயகத்துக்கு சங்கடம் ஏற்படும் போதெல்லாம் ஜனநாயகத்தைக் காப்போம், அதைக் காப்பதற்கு சபதம் ஏற்போம் என்று சொல்லிய இந்த அரசு இன்றைக்கு சவால் விடுகின்ற அளவில் இதைக் கொண்டுவந்திருக்கின்றது. இந்த அரசு ஜனநாயகம் பரவலாக்கப்படவேண்டுமென்று மனதிலே குறிக்கோள் கொண்டு, தனிப்பட்ட ஒவ்வொரு மனிதனுக்கும் உரிமை வழங்கப்படவேண்டும் என்று சொல்லி, ஊராட்சி மன்றத் தலைவர்களும் சரி, ஊராட்சி ஒன்றியத் தலைவர்களும் சரி, மாநகராட்சித் தலைவர்களும் சரி பொதுமக்களால்தான் தேர்ந்தெடுக்கப் பட வேண்டும் என்ற புரட்சிகரமான திட்டத்தைக் கொண்டு வரும் இச் சமயத்தில் தேர்தலை ஒத்திவைக்கக் கோரும் இந்தச் சட்ட முன்வடிவைக் கொண்டுவருகின்ற துர்பாக்கியம் அமைச்சர் அவர்களுக்கு ஏற்பட்டிருக்கிறது. அதற்காக நான் வருத்தப்படுகின்றேன். மக்களுக்குக் கொடுக்கப்பட வேண்டிய உரிமையை உரிய காலத்தில் கொடுக்காமல் பறிப்பது ஜனநாயகத்துக்கு நல்லதல்ல என்பதைத் தெரிவித்துக் கொள்ளுகின்றேன். இன்றைக்கு ஓராண்டு காலம் தேர்தல்கள் தள்ளிவைக்கப்பட வேண்டுமென்று இருக்கின்ற இந்தச் சட்டம் மக்களுடைய அடிப்படை உரிமையைப் பறிப்பதாகும். ஐந்தாண்டுகளுக்கு ஒரு முறை மக்கள் பிரதிநிதிகள் தேர்ந்தெடுக்கப்படாமல் இருப்பதே ஜனநாயகத்துக்கு நல்லதல்ல. மேலும் இதை ஒத்திவைப்பதால் இந்தக் கட்சியை வளர்ப்பதற்கும் ஜனநாயகத்தை பலவீனப்படுத்துவதற்கும் இந்தச் சட்டம் பயன்படுகிறது என்பதைச் சொல்லி முடித்துக்கொள்ளுகின்றேன்.

---

@ 237-238 ஆம் பக்கங்களில் இணைப்பு IV ஆக அச்சிடப்பட்டுள்ளது.